**செய்தி வெளியீடு எண்.88** **நாள்.28.07.2021**

**டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி, தரமணி, சென்னை–113**
**பட்டயப் படிப்பு (டிப்ளமோ) சேர்க்கை 2021 – 2022**
**(தமிழ்நாடு மாணவர்களுக்கு மட்டும்)**

சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்குநரது விளம்பர அறிக்கை எண்: 021644 / I – 1 / 2021, நாள். 19.07.2021 –ன்படி, சென்னை, தரமணி, டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் 2021 – 2022 –ம் கல்வி ஆண்டிற்கான நேரடி இரண்டாமாண்டு (டிப்ளமோ) பட்டய படிப்பிற்கு, சேர்க்கை பதிவு இணையதள வாயிலாக வரவேற்கப்படுகிறது. இணையதளத்தில் விண்ணப்பிக்க சென்னை, தொழில் நுட்ப கல்வி இயக்ககத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள www.tngptc.in அல்லது www.tngptc.com என்ற இணையதளத்தில் விண்ணப்பங்களை வீட்டிலிருந்தபடியே செல்போன் அல்லது கணினி மூலமாக எந்த பாடப்பிரிவிற்கும் பதிவு செய்யலாம். இணையதளம் வழியாக விண்ணப்பிக்க இயலாத மாணவர்கள் மாவட்ட சேவை மையங்கள் மற்றும் (Tamil Nadu Polytechnic Admission Facilitation Centre - TPAFC) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியும் Tamil Nadu Polytechnic Admission Facilitation Centre (TPAFC) சேவை மையமாக செயல்படுகிறது என்றும், இம்மையத்தின் மூலம் மாணவர்கள் இணையதளத்தில் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், இச்சேவையை மாணவர்கள் பயன்படுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இக்கல்லூரியில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பாடப்பிரிவுகள் பயிற்றுவிக்கப்படுகிறது :-**
1. ஆர்க்கிடெக்சுரல் அசிஸ்டன்ட்ஷிப் (3 1/2 வருடம்), 2. சிவில் என்ஜினியரிங், 3. கம்ப்யூட்டர் என்ஜினியரிங், 4. எலக்ட்ரானிக்ஸ் அன்டு கம்யூனிகேஷன் என்ஜினியரிங், 5. இன்ஸ்ட்ருமென்டேஷன் அன்டு கண்ட்ரோல் என்ஜினியரிங், 6. கார்மெண்ட் டெக்னாலஜி, 7. என்விரான்மெண்டல் என்ஜினியரிங், 8. கமர்ஷியல் பிராக்டீஸ் (வணிகவியல்) 9.காஸ்மெட்டாலாஜி(1வருடம்)

**கல்வி கட்டணம்:- கல்லூரியின் ஆண்டு கல்வி கட்டணம் ரூ. 2160/– மட்டும்.**

மேலும், இக்கல்லூரியில் தங்கி பயில விடுதி வசதியும் உண்டு. 100 % வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். அரசின் கல்வி உதவித் தொகை, இலவச பஸ் பாஸ், முதலாமாண்டு மாணவிகளுக்கு இலவச பாட புத்தகங்கள் மற்றும் அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் நலத்திட்டங்கள் பெற்று தரப்படும். டிப்ளமோ முடித்தவர்கள் நேரடி இரண்டாமாண்டு BE பொறியயில் படிப்பில் எந்த பிரிவிலும் சேர்ந்து பயிலலாம்.

**கல்வித் தகுதி:**

1. **நேரடி இரண்டாமாண்டு (Direct 2ndYear Diploma Course)**
   - மேல்நிலை கல்வியில் தேர்ச்சி (10 +2) / அல்லது 2 ஆண்டுகள் தொழில் பிரிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேணடும் (10th std passed and 2 years ITI passed with appropriate programmme)
   - **பதிவுக் கட்டணம்** : பதிவுக் கட்டணமான ரூ.150/–ஐ விண்ணப்பதாரர் **Debit Card / Credit Card/ Net Banking** இணையதள வாயிலாக செலுத்தலாம்.
2. **SC/ST** பிரிவினருக்கு பதிவுக் கட்டணமில்லை.

**இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்திட துவங்கும் நாள்: 20.07.2021**
**இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்திட கடைசி நாள் : 05.08.2021**

அனைத்து தகவல்கள், வழிகாட்டி மற்றும் கால அட்டவணையை மாணாக்கர்கள் https://www.tngptc.in or https://www.tngptc.com இணையதள வாயிலாக மட்டுமே அறிந்து கொள்ளலாம். மாணவியரின் மதிப்பெண் மற்றும் அரசின் இனசுழற்சியின்படி, மாணவியர் விரும்பும் பாடப்பிரிவு ஒதுக்கப்படும்.

**Enquiry Contact No. 044 – 22542013.**
**Whats App No. TFC No (10) - 9566075008**

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை–01**